1987 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தேர்வு எழுதுவதற்கும் பணியில் சேர்வதற்கும் சம்பந்தம் இல்லை. தேர்வு எழுதுபவர்களுக்கு எல்லாம் இடம் கிடைத்து விடப் போவதில்லை. குறிப்பிட்ட இடங்கள்தான் இருக்கின்றன. குறிப்பிட்ட எண்ணிக்கை இருக்கிற காரணத்தால் பணியில் சேர்ந்துதான் ஆக வேண்டும். அவர்களுக்கு சேர்வதற்கு இடம் கிடைத்தால் அதன் பிறகு அவர்கள்விடுப்பில் வரலாம்.

டாக்டர் ந. மாசிலாமணி: தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் பட்ட மேற்படிப்பு துவங்குகிறபோது சம்பந்தப்பட்ட துறையில் குறைந்தபட்சம் ரீடர் அல்லது புரபசர் இருக்க வேண்டுமென்று இந்தியன் மெடிக்கல் கவுன்சில் விதி முறையை வைத்திருக்கிறது. தமிழகத்தில் பல இடங்களில் அது பின்பற்றப்படுவதில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். தஞ்சை மருத்துவக் கல்லூரியில் Diplom in Psychiatric Medicine-ல் பல ஆண்டுகளாகக் கேட்கப்பட்டும் அங்கே Reader-ஓ Professor-ஓ இல்லை. எனவே தமிழகத்தில் கண்டிப்பாக அந்த விதிமுறைகள் பின்பற்றப்படுவதற்கு உரிய நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்கு நன்றி. இதுபற்றி அரசு நிச்சயம் நடவடிக்கையெடுக்கும்.

டாக்டர் த. முகம்மது சலீம்: தலைவர் அவர்களே, இந்த Post-Graduate Degree தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. எந்தெந்த தனியார் மருத்துவமனைகளுக்கு இந்த Post-Graduate Degree-க்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனியார் மருத்துவமனைகள் கேட்டதற்கு நாம் எதற்கும் அனுமதி அளிக்கவில்லை. கண் சிகிச்சைக்கு மட்டும் ஒரு மருத்துவ மனைக்கு அனுமதி அளித்திருப்பதாக என்னுடைய நினைவு. மற்றவர்கள் கேட்டார்கள். ஆனால் யாருக்கும் அனுமதி அளிப்ப தில்லையென்று அரசு முடிவெடுத்திருக்கிறது.

ஆற்காடு வட்டம், கலவை மருத்துவமனையில் படுக்கைகளை அதிகரித்தல்.

270—(*வினா எண். 9473) திரு. த. பழனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆற்காடு (வட்டம்) தொகுதி, கலவை மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?